**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

**திருச்செங்கோடு**

முன்னிலை:– திரு. P. ரங்கராஜ், B.A.,B.L.,

நீதித்துறை நடுவர், திருச்செங்கோடு

2025 ம் ஆண்டு ஜூன் மாதம் 20–ம் நாள் வெள்ளிக்கிழமை

**M.C.No.9/2024**

C.N.R.No.TNNM08–000974–2024

1. சசிகலா (வயது 37/2024),
   த/பெ.பரமசிவம்
   க/பெ.மோகன்
2. மைனர் சமித் (16/2024)
   த/பெ. மோகன்

இளவருக்காக அடுத்த உறவின் முறையினர்/பாதுகாவலர்/அவரது தாயார்
மேற்படியார்கள் முகவரி,
40ஏ வடக்கு தோட்டம்,
பன்னீர்குத்திபாளையம்,
பிரிதி கிராமம்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம். ... மனுதாரர்கள்

/எதிராக/

மோகன் (வயது 55/2024),
த/பெ. சின்னாசகவுண்டர்,
40ஏ வடக்கு தோட்டம்,
பன்னீர்குத்திபாளையம்,
பிரிதி கிராமம்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 10.01.2024–ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 17.06.2025–ம் தேதியில் விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.S. சரவணன் அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும் ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2025.06.20 05:52:15 +0530

**உத்தரவு**

1) இம்மனுவானது 144 BNSS –ன் படி 1, 2 மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரரிடம் ஜீவானாம்சம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:–**

2) இந்த மனுவில் 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பெரியோர்களால் நிச்சியக்கப்பட்டு கடந்த 13.07.2005ம் தேதியில் குல வழக்கப்படி திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின் போது மனுதாரரின் பெற்றோர் மனுதாரருக்கு 3 பவுன் செயின் –1, வளையல் –2 ½ பவுன், தோடு 1 பவுன் ஆகிய நகைகள், ரூ.50,000/– மதிப்புள்ள வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் ரூ.1,00,000/– பெட்டிப்பணம் ஆகியவற்றை சீர்சரிசையாக கொடுத்ததாகவும், திருமணம் முடிந்து மனுதாரர்கள் எதிர்மனுதாரரின் வீட்டில் கூட்டுக்குடித்தனம் நடத்தி வந்ததாகவும், திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரர்கள் சுமார் 15 நாட்கள் மட்டுமே சந்தோசமாக வாழ்ந்து வந்ததாகவும், பின்னிட்டு எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரிடம் தனக்கு கடன் இருப்பதாகவும், அதனால் மனுதாரருக்கு சீர்வரிசையாக கொடுத்த நகையை தன்னிடம் கொடுக்கும்படி கேட்டதாகவும், அதனை மனுதாரர் தர மறுத்ததால், எதிர்மனுதாரர் அடித்து இடது காதில் இரத்த காயம் ஏற்படுத்தியதாகவும், இதனை மனுதாரர் அவரது பெற்றோர் மற்றும் அவரது உறவினர்களுக்கு போன் மூலம் தகவல் சொல்லி வரவழைத்தாகவும், அப்போது எதிர்மனுதாரர் தான் அப்படி தான் அடிப்பேன் என்றும், இஷ்டம் இருந்தால் வாழட்டும் இல்லை என்றால் வீட்டை விட்டு வெளியே போகலாம் என்று கூறியதாகவும், பின்னர் சமாதானப்படுத்தி மனுதாரரை எதிர்மனுதாரரின் வீட்டிலேயே விட்டுவிட்டு சென்றதாகவும், மேலும், எதிர்மனுதாரரின் சகோதரி வசந்தி அவரின் கணவரை இழந்ததால் எதிர்மனுதாரரின் வீட்டின் வசித்து வருவதாகவும், அவர்களுக்கு அனைத்து வேலைகளையும் மனுதாரரை செய்ய சொல்லி கொடுமைப்படுத்தியதாகவும், இதனை எதிர்மனுதாரரிடம் மனதாரர் கூறியதற்கு எதிர்மனுதாரர் மனுதாரரிடம் அடிமை போல் அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டிய உன்னை

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2025.06.20 05:52:25 +0530

திருமணம் செய்து கொண்டதாக கூறி அடித்து, உதைத்து வீட்டை விட்டு விரட்டி விட்டதாகவும், அதனால் மனுதாரர் வேறு வழியின்றி தன் பெற்றோர் வீட்டிற்கு சென்றதாகவும், மீண்டும் எதிர்மனுதாரர் 10 நாட்களுக்கு பிறகு மனுதாரரை சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றதாகவும், பின்னிட்டு மீண்டும் மனுதாரரை அடித்து, உதைத்து கொடுமைப்படுத்தி வந்ததாகவும், ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிர்மனுதாரரின் சகோதரி வசந்தி சொல்லி தான் எதிர்மனுதாரர் இப்படி செய்வதாக கூறியதாகவும், பின்னர் 2007ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டு வரை மனுதாரரும், எதிர்மனுதாரரும் தனிக்குடித்தனம் செய்து வந்ததாகவும், அப்போது மனுதாரர் சாயப்பட்டறைக்கு வேலைக்கு சென்றதாகவும், அத்தியாவசிய செலவுகள் அனைத்தும் 1ம் மனுதாரரே செய்து வந்ததாகவும், எதிர்மனுதாரர் அவர் சம்பாதித்த பணம் அனைத்தையும் அவரின் சகோதரி வசந்தியிடம் கொடுத்துவிடுவார் என்றும், இதனை கேட்டால் எதிர்மனுதாரர் மனுதாரரை அடித்து, உதைத்து கொடுமைப்படுத்துவதாக கூறியுள்ளார்.

3) மேலும், 1ம் மனுதாரர் தனது மனுவில் 2007-ம் வருடம் கருவுற்றதாகவும், எதிர்மனுதாரர் சரிவர கவனிக்காமலும், மருத்துவ செலவுகள் எதுவும் செய்யாமலும், இருந்துவந்ததாகவும், பின்னிட்டு 16.11.2008ம் தேதியில் ஈரோடு TPN மருத்துவமனையில் மனுதாரருக்கு சமித் என்ற ஆண் குழந்தை பிறந்ததாகவும், அப்போது எதிர்மனுதாரர் வந்து பார்க்கவில்லை என்றும், மருத்துவ செலவான ரூ.60,000/-த்தை மனுதாரரின் பெற்றோர்கள் பார்த்ததாகவும், எதிர்மனுதாரர் மனுதாரரை கவனிக்காததால், மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், குழந்தை பிறந்து ஒரு வருடம் கழித்து எதிர்மனுதாரர், மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதாக கூறி அழைத்துச் சென்றதாகவும், 2009ம் ஆண்டிற்கு பின்னிட்டு மீண்டும் மனுதாரர் கொடுமைப்படுத்தி வந்ததாகவும், எதிர்மனுதாரர் டிரைவர் வேலை செய்து வருவதால், அடிக்கடி வேலைக்கு சென்றுவிட்டு, மாதக்கணக்கில் வரமாட்டார்

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2025.06.20 05:52:34 +0530

என்றும், எதிர்மனுதாரர் இல்லாத நேரங்களில், எதிர்மனுதாரரின் சகோதரி வசந்தியும், அவரின் மகள் கோகிலாவும், மாமியார் சரஸ்வதியும் மனுதாரரை ஒரு அடிமை போல வீட்டு வேலைகள் செய்ய வைத்து உடலளவிலும், மனதளவிலும் மிகுந்த கொடுமை செய்து வந்ததாகவும், மனுதாரர் தனக்கு தேவையான அத்தியாவசிய செலவுகளை செய்து வந்ததை மனுதாரர் கேட்டதற்கு, அதையெல்லாம் நீ கேட்க கூடாது என அடித்து உதைத்ததாகவும், இதனால் மனுதாரர் தனது அன்றாட வாழ்வாதாரத்திற்கே மிகவும் கஷ்ட ஜீவனம் செய்து வந்ததாகவும், மேலும், மனுதாரர் தனது அத்தியாவசிய செலவுகளுக்கு கூட எதிர்மனுதாரரிடம் கேட்டால் எதிர்மனுதாரர் அவரின் சகோதரி வசந்தியிடம் கேட்டு பெற்றுக்கொள் என்றும், வசந்தி அனுமதித்தால் தான் மனுதாரருக்கு பணம் தருவேன் என்று கூறிதாக கூறியுள்ளார்.

4) எதிர்மனுதாரர் செல்போனில் ஆபாச படங்களை பார்த்து அதனை மனுதாரரிடம் காட்டி, அதில் வருவது போன்று உடலுறவு செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவதாகவும், இதற்கு மனுதாரர் உடன்படிவில்லை என்பதாலும், மேலும், மனுதாரரிடம் அவரது தங்கச் செயினை அடமானம் வைப்பதற்காக கேட்டதாகவும், மனுதாரர் தர மறுத்ததாலும் எதிர்மனுதாரர் மனுதாரரை ஒரு சைக்கோ போல கீழே தள்ளி எட்டி எட்டி உதைத்ததாகவும், இதனால், முதுகு தண்டுவடத்தில் ஜவ்வு விலகிவிட்டதாகவும், அதனால், மனுதாரர் திருச்செங்கோட்டில் உள்ள திருக்குமரன் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டதாகவும், பின்னர் மேல் சிகிச்சைக்காக கொங்கு மருத்துவமனை கோயம்புத்தூரில் சிகிச்சை பெற்றதாகவும், மீண்டும் ஈரோடு பெருந்துறை ரோட்டில் டிரஸ்ட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், மனுதாரருக்கு இதுநாள் வரை முதுகு தண்டுவட பிரச்சினை சரியாகவில்லை என்றும், 2ம் இளவர் மனுதாரர் தனியார் பள்ளியில் தற்போது 11ம் வகுப்பு படித்து வருவதாகவும், எதிர்மனுதாரர் 2ம் மனுதாரருக்கு கல்வி கட்டணம் ஏதும் செலுத்தாமல் இருந்து வந்ததால் மனுதாரர் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளரிடம் புகார்

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2025.06.20 05:52:41 +0530

கொடுத்ததாகவும், விசாரணையில் எதிர்மனுதாரர் 2ம் மனுதாரரின் கல்வி கட்டணத்தை செலுத்த ஒப்புகொண்டதாகவும், ஆனால், ஒப்பு கொண்டது போல கல்வி கட்டணத்தை எதிர்மனுதாரர் செலுத்தவில்லை என்றும், இதனால் மனுதாரர் இளவர் மனுதாரரை படிக்க வைக்க மிகவும் சிரமப்பட்டு வருவதாக தன் மனுவில் கூறியுள்ளார்.

5) எதிர்மனுதாரரின் தந்தைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து குமாரபாளையம் கிராமம், ச.எண்.22/1, 22/5, 23/3ஏ இருந்ததை, எதிர்மனுதாரரின் தந்தை இறந்த பின்னிட்டு கடந்த 16.06.2021 ம் தேதியில் பாகபிரிவினை செய்து கொண்டதாகவும், எதிர்மனுதாரரின் பாகபிரிவு செய்த சொத்தை எதிர்மனுதாரர் விற்பனை செய்ய கூடாது என தனது மகனுக்கு மனுதாரரை கார்டியனாக வைத்து திருச்செங்கோடு சார்பு நீதிமன்றத்தில் O.S.No.197/2021 வழக்கு நிலுவையில் இருந்து வருவதாகவும், கடந்த 07.02.2024ம் தேதியில் மனுதாரர் தனது முதுகுத்தண்டு வலி பிரச்சனையால் அவதிப்பட்டு கொண்டிருந்தபோது எதிர்மனுதாரர் மனுதாரரை உடலுறவுக்கு வற்புறுத்தியதாகவும், மனுதாரர் தன் உடல் உபாதை எடுத்துக் கூறியும் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளாமல் ஒரு சைக்கோ போன்று குடி போதையில் மனுதாரரை அடித்து உதைத்து கொடுமை செய்து வலுகட்டாயமாக உடலுறவு கொள்ள முற்பட்டதாகவும், மனுதாரர் மறுக்கவே எதிர்மனுதாரர் மனுதாரரை சரமாரியாக தாக்கியதாகவும், அதனால் மனுதாரருக்கு வலது கை மணிக்கட்டு எலும்பில் விரிசல் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்ததாகவும், திருச்செங்கோடு ஊரக காவல் நிலையத்தார் மனுதாரரிடம் வாக்குமூலம் பெற்று அதற்கு CSR.No.29/2024 வழங்கப்பட்டதாகவும், விசாரணையில் எதிர்மனுதாரர் தான் திருந்திவிட்டதாகவும், இனிமேல் இதுபோன்ற தவறு செய்யமாட்டேன் எனவும் உறுதி கொடுத்ததால் மனுதாரரும் குழந்தையின் நலனை கருத்தில் கொண்டு ஒப்புகொண்டு புகாரை வாப்பஸ் பெற்றதாகவும், அதன் பின்னிட்டும் எதிர்மனுதாரர் திருந்தாமல் கடந்த

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2025.06.20 05:52:49 +0530

12.07.2024ம் தேதியில் மனுதாரரை மீண்டும் ஒரு சைக்கோ போல தூங்க விடாமல், சித்திரவதை செய்து, அடித்து வீட்டை விட்டு துரத்திவிட்டதாகவும், 2ம் மனுதாரரும் 1ம் மனுதாரருடன் வந்துவிட்டதாகவும், இதனால் மனுதாரர் சொல்லென துயரத்திற்கு ஆளானார் என்றும், எதிர்மனுதாரர் அனாதரவு செய்துவிட்டதால் அன்றிலிருந்து மனுதாரரும், 2ம் மனுதாரரும் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாக கூறியுள்ளார்.

6) எதிர்மனுதாரர் லாரி மற்றும் ரிக் வண்டியில் டிரைவராக வேலை செய்து மாதத்திற்கு ரூ.60,000/-மும், பைனான்ஸ் தொழில் மூலம் மாதம் ரூ.40,000/-மும், நிலம் விற்றதின் மூலம் வந்த பணம் ரூ.1 கோடியை வங்கியில் வைப்பு தொகையாக வைத்து வட்டி பெற்று மாதம் ரூ.1,00,000/-ஆக மொத்தம் ரூ.2,00,000/- வரை வருமானம் ஈட்டி வருவதாகவும், ஆனால், மனுதாரருக்கும் அவரது குழந்தைக்கு எவ்வித பராமரிப்பு தொகையும் கொடுக்காமல் அனாதரவு செய்து கஷ்ட ஜீவனம் செய்ய வைத்ததாகவும், எனவே, தான் இம்மனுவினை தாக்கல் செய்ய அவசியம் ஏற்பட்டதாக கூறியுள்ளார்.

7) எதிர்மனுதாரர் செய்த கொடுமையால் மிகுந்த மனவேதனைக்கு ஆளானதால் மனுதாரரால் வேலைக்கு செல்லாமல் வருமானம் இல்லாமல் மனுதாரர் தன்னையும், தனது குழந்தையை பராமரிக்க முடியாமல் திண்டாடி வருவதாகவும், ஆகவே, எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு மருத்துவம், கல்வி, உணவு, உடை, இருப்பிடம் போன்ற அத்தியாவசிய செலவினங்களுக்காக 1ம் மனுதாரருக்கு மாதம் ரூ.30,000/-மும் 2ம் இளவர் மனுதாரருக்கு மாதம் ரூ.30,000/-ஆக மொத்தம் ரூ.60,000/- மனுதாரர்களுக்கு பராமரிப்பு தொகை கொடுக்கவும் உத்தரவிடவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்.

8) எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராக கோரி 19.08.2024 ம் தேதியில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பியும், எதிர்மனுதாரருக்கு போதுமான வாய்ப்புகள் வழங்கியபோதும் நீதிமன்றத்தில் அவர் ஆஜராகாததால் எதிர்மனுதாரர்

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2025.06.20 05:53:02 +0530

24.10.2024–ம் தேதி தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார். மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9) மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில் மனுதாரர் மனுவில் கோரியவாறு உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.

10) ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுவில் கோரியுள்ள பரிகாரங்களை ஒரு தலைபட்சமாக உத்தரவிட கோரினாலும், மனுவில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் தான் தீர்வு காணவேண்டுமென்பதே நியதியாகும். மேலும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் ம.சா.ஆ.1 திருமண பத்திரிக்கை அசலை பரிசீலனை செய்த போது எதிர்மனுதாருக்கும், 1ம் மனுதாராருக்கும் திருமணம் நடந்துள்ளது தெரிய வருகிறது. ம.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்தபோது, 2ம் மனுதாரர் 1ம் மனுதாராருக்கும், எதிர்மனுதாரருக்கும் பிறந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. இதனை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர் அவரது தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை.

11) மனுதாரர்கள் தன் மனுவில் எதிர்மனுதாரர் மனுதாரர்களை காரணமின்றி புறக்கணித்துள்ளதாகவும், 2024ம் ஆண்டில் இருந்து 1ம் மனுதாரர் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் இச்சங்கதிகள் மறுக்கப்படவில்லை. 1ம் மனுதாரர் தனது மனைவி என்பதையும், 2ம் மனுதாரர் தனது குழந்தை என்பதையும் மறுத்து, எதிர்மனுதாரரோ அவர் தரப்பிலோ எவ்வித மறுத்துரைத்தல்களும் இல்லாத நிலையிலும் மனுதாரர்கள் எதிர்மனுதாரரின் மனைவி மற்றும் மகன் என்றும் அவர்களை பேணி பராமரிக்கவேண்டிய பொறுப்பு எதிர்மனுதாரருக்கு உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) மனுதாரர் தனது மனுவில் எதிர்மனுதாரின் வருமானத்தை குறித்து எந்தவித குறிப்பும் குறிப்பிடவில்லை. எனவே, ஒரு திடகாத்திரமான

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2025.06.20 05:53:13 +0530

ஆணின் ஒரு நாளின் சராசரி வருமானமாக ரூ.800/— என கணக்கிட்டால் அவர் மாத வருமானமாக ரூ.24,000/— பெற வாய்ப்புள்ளது, ஆகவே, எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரின் கணவர் மற்றும் 2ம் மனுதாரரின் தகப்பனார் என்ற முறையில் அவர்களை பராமரிக்க கடமைப்பட்டவர் என்பதாலும் எதிர்மனுதாரரின் தகு நிலையை கருத்தில் கொண்டும் மனுதாரர்களுக்கு போதிய உணவு, உடை, உறைவிடம், கல்வி மற்றும் மருத்துவ செலவுகளை வழங்க வேண்டியது எதிர்மனுதாரரின் அத்தியாய கடமையாகும். எனவே மனுதாரர்களை எதிர்மனுதாரர் கணவர் மற்றும் தகப்பனார் என்ற முறையில் பராமரிக்க அவர்களுக்கு வாழ்க்கை பொருள் உதவியாக 1ம் மனுதாரருக்கு மாதம் ரூ. 5000 /— மும், 2ம் மனுதாரருக்கு மாதம் ரூ. 5000/— ம் வழங்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) முடிவாக எதிர்மனுதாரர் இந்த மனு தாக்கல் செய்த தேதி முதற்கொண்டு 1ம் மனுதாரருக்கு மாதம் ரூ. 5000/— மும், 2ம் மனுதாரரர் அவரது உரிமை வயதை அடையும் வரை மாதந்தோறும் ரூ. 5000 /— வாழ்க்கை பொருள் உதவியாக வழங்க வேண்டுமென்றும், ஒவ்வொரு மாதத் தொகையையும் அடுத்து வரும் ஆங்கில மாதம் 5—ம் தேதிக்குள் நேரிடையாகவோ, காசோலையாகவோ, பணவிடையாகவோ, 1, 2 மனுதாரர்களின் வங்கி கணக்கிலோ வழங்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மொத்த மாத வாழ்க்கை பொருள் உதவி தொகை ரூ. 10,000/—. மனுவில் செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 2025ம் ஆண்டு ஜூன் மாதம் 20ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2025.06.20 05:53:24 +0530

நீதித்துறை நடுவர்
திருச்செங்கோடு

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>–**

ம.சா.1 சசிகலா

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | உபய மனுதாரர்களின் திருமண அழைப்பிதழ் – அசல் |
| ம.சா.ஆ.2 | மனுதாரரின் ஆதார் அட்டை – நகல் |
| ம.சா.ஆ.3 | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை – நகல் |
| ம.சா.ஆ.4 | குழந்தை பிறப்பு சான்றிதழ் – நகல் |
| ம.சா.ஆ.5 | உபய மனுதாரர்களின் குடும்ப போட்டோ |
| ம.சா.ஆ.6 | எதிர்மனுதாரர் மனுதாரரை அடித்ததால் மனுதாரர் முதுகு தண்டுவடத்திற்கு சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ஆவணங்கள் – நகல் |
| ம.சா.ஆ.7 | மனுதாரர் எதிர்மனுதாரின் மீது திருச்செங்கோடு ஊரக காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு தரப்பட்ட CSR.No.29/2024 – நகல். |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி/சான்றாவணம்:–** இல்லை.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2025.06.20 05:53:31 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.